செ.வெ.எண்! 578

**பொது விநியோகத்திட்ட கிடங்கில் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர்,**

**திரு. இரா. காமராஜ் அவர்கள் திடீர் ஆய்வு.**

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. இரா. காமராஜ் அவர்கள் 3.10.2012 அன்று சென்னை மண்டலம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக 5280 மெ.டன் கொள்ளளவு கொண்ட மின்ட் பொது விநியோகத்திட்ட கிடங்கில் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர், இதய தெய்வம், புரட்சித்தலைவி அம்மா அவர்களின்" விலையில்லா அரிசி" வழங்கும் திட்டச் செயல்பாடுகளை ஆய்வு செய்யும் வகையில், தரமான அரிசி, சரியான எடையில் கிடங்கிலிருந்து இயக்கம் செய்யப்படுவது உறுதி செய்யப்படவேண்டுமென பொது விநியோகத் திட்டத்தினை செயல்படுத்திடும் அலுவலர்களை அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவுப்படி வெளிச்சந்தையில் அரிசி விலையைக் கட்டுப்படுத்தும் நோக்குடன்,மேற்கு வங்காளத்திலிருந்து தரமான அரிசியினை கொள்முதல் செய்து சென்னை நகரில் இயங்கிவரும் அமுதம் பல்பொருள் அங்காடிகள் மற்றும் கூட்டுறவு விற்பனை மையங்கள் மூலம் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகிறது என அமைச்சர் தெரிவித்தார்.

இந்திய உணவுக்கழகம் ஆவடி கிடங்கு மூலமாக பெறப்படும் மத்திய தொகுப்பு ஒதுக்கீட்டு அரிசி, கோதுமை மற்றும் அரவை முகவர்களிடமிருந்து பெறப்படும் அரிசி ஆகியவற்றின் தரத்தை ஆய்வு செய்து, பூச்சிகளின் தாக்கம்

ஏதுமில்லாது அட்டிகள் பராமரிக்கப்பட வேண்டுமென தரக்கட்டுப்பாடு அலுவலர்களை அறிவுறுத்தினார்.

பொது விநியோகத்திற்கு இயக்கம் செய்ய தயாராக இருந்த லாரியில் ஏற்றப்பட்டிருந்த " விலையில்லா அரிசி" மூட்டைகளின் தரத்தை சோதித்து பார்த்ததுடன், மூட்டைகளின் எடையையும், தராசுகளில் வைத்து மறு எடையிட்டுப் பார்த்தார்.

சிறப்பு பொது விநியோகத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு, ஆகியவற்றின் தரத்தினை அமைச்சர் சரிபார்த்தார். அத்தியாவசியப் பொருட்களின் எடை, தரம் மீது ஏதாவது குறைபாடுகள் தெரிவிக்கப்பட்டால் அவ்வப்போது அவற்றை நிவர்த்தி செய்ய வேண்டு மெனவும், இந்த அறிவுரைகளை செயல்படுத்த தவறும் அலுவலர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், அமைச்சர் தெரிவித்தார்.

பாமாயில் பாக்கெட்டுகள் உடையாமல் கவனமாகக் கையாளப்பட்டு, நியாய விலை அங்காடிகளுக்கு அனுப்பப்பட வேண்டுமெனவும், ஒழுகும் தன்மையில் பாக்கெட்டுகள் காணப்பட்டால் அவற்றை இயக்கம் செய்வதை தவிர்க்க வேண்டுமெனவும் அறிவுறுத்தினார்.

கிடங்கு பணியாளர்கள், சுமைதூக்குவோர், பணிபுரியும் இடங்களை தூய்மையாக வைத்துக் கொள்ளவும், பதிவேடுகள், ஆவணங்கள் ஆகியவற்றை செம்மையாகப் பராமரித்துக் காத்தல் வேண்டுமெனவும் கூறினார்.

மண்ணெண்ணெய் வழங்கும் நிலையத்தை ஆய்வு செய்த அமைச்சர், பொது மக்களுக்கு சீரான முறையில் மண்ணெண்ணெய் வழங்க வேண்டுமெனவும், எடை குறைவு மீதான புகார்கள் ஏதும் வராமல் ஊழியர்கள் பணியாற்ற வேண்டுமெனவும், அறிவுறுத்தினார். மண்ணெண்ணெய் டேங்கர்களின் இருப்பு அளவை டிப் ராடு அளவு கோல் உதவியுடன் சரிபார்த்தார்.

மேலும் மின்ட் கிடங்கு வளாகத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி தற்போது ரூ. 60 இலட்சம் செலவில் 1250 மெ.டன் கொள்ளளவில் கட்டப்பட்டு பணிமுடியும் தருவாயில் உள்ள இரு கிடங்குகளையும் ( 750 மெ.டன், 500 மெ.டன்) ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது தமிழக அரசின் உணவுத்துறை செயலர் திருமதி. M.P.நிர்மலா,இ.ஆ.ப., குடிமைப்பொருள் வழங்கல் துறை ஆணையாளர் திரு. பசீர் அகமது, இ.ஆ.ப., த.நா.நு.பொ.வா.கழக நிர்வாக இயக்குநர் திரு. எம். சந்திரசேகரன், இ.ஆ.ப., பொது மேலாளர் திருமதி. இலட்சுமி, மற்றும் முதுநிலை மண்டல மேலாளர் திரு. பாஸ்கரன் ஆகியோர் உடனிருந்தனர்.